# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අති විශෙෂ    அதிவிசேஷமானது**

අංක 2369/39 – 2024 පෙබරවාරි මස 02 වැනි සිකුරාදා – 2024.02.02

***2369/39 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி.- 4/1981* (II)

***1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்***

***24இ என்னும் பிரிவு மற்றும் 24ஈ என்னும் பிரிவின் கீழான கட்டளை***

*1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 24இ என்னும் பிரிவினாலும் 24ஈ என்னும் பிரிவினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சுற்றாடல் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல ஆகிய நான் இக்கட்டளைமூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் -*

*(அ)* *எந்தக் காணி இடப்பரப்பின் எல்லை அடையாளங்களும் எல்லைகளும் இதற்கான அட்டவணை* I *இன் பாகம்* I, *பாகம்* II *மற்றும் பாகம்* III *இல் தரப்படுகின்றனவோ அந்தக் காணி இடப்பரப்பு சட்டத்தின் நோக்கங்களுக்காக சூழல் பாதுகாப்பு இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ("பாதுகாப்பு இடப்பரப்பு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "ஏத்தாலைக்குளம் சூழல் பாதுகாப்பு இடப்பரப்பு" என அழைக்கப்படுதலும் வேண்டும்;*

*(ஆ)* *இக்கட்டளை வலுவிலிருக்கும் காலம் வரை -*

(i) *மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுடன் முரணாகவுள்ள பாதுகாப்பு இடப்பரப்பினுள் உள்ள ஏதேனும் திட்டமிடற் செய்திட்டம் அல்லது கருத்திட்டம் இக்கட்டளை நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து பாதுகாப்பு இடப்பரப்பினுள் நடைமுறையில் இல்லாதொழிதல் வேண்டும்;*




*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ii) அதிகாரசபை தவிர்ந்த ஆளெவரும் பாதுகாப்பு இடப்பரப்பினுள் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக எவையேனும் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளை பிரயோகித்தலோ, புரிதலோ மற்றும் நிறைவேற்றுதலோ ஆகாது:

ஆயின், அதிகாரசபை பாதுகாப்பு இடப்பரப்பினுள் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான அதன் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எவற்றையும் 26 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் அரசாங்க திணைக்களம், கூட்டுத்தாபனம், நியதிச்சட்டசபை, உள்ளூரதிகாரசபை அல்லது எவரேனும் பகிரங்க அலுவலருக்கு கையளிக்கின்றவிடத்து, அத்தகைய அரசாங்க திணைக்களம், கூட்டுத்தாபனம், நியதிச்சட்டசபை, உள்ளூரதிகாரசபை அல்லது பகிரங்க அலுவலர் சொல்லப்பட்ட பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளை பிரயோகிக்கலாம், புரியலாம் மற்றும் நிறைவேற்றலாம்; அத்துடன்

(iii) பாதுகாப்பு இடப்பரப்பினுள் பௌதிக திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் இதற்கான அட்டவணை II இன் பாகம் I இல் தரப்பட்ட செயற்பாடுகளுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இதற்கான அட்டவணை II இன் பாகம் II இல் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய பிரயோகிக்கப்படுதலும், புரியப்படுதலும் மற்றும் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

இக்கட்டளையில் -

"சட்டம்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம் எனப் பொருள்படும்; அத்துடன்

"அதிகாரசபை" என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபை எனப் பொருள்படும்.

**கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்ல,**
சுற்றாடல் அமைச்சர்.

கொழும்பு,
2024, பெப்புருவரி 02.

**அட்டவணை I**

**பாகம் I**

1. பாதுகாப்பு இடப்பரப்பின் விஸ்தீரணம் 36.4217 ஹெக்டேயர்களாகும்.

2. அத்தகைய பாதுகாப்பு இடப்பரப்பு, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தெற்கு எருவில்பற்று பிரதேச செயலகம், குருக்கள் மடம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளது.

3. பாதுகாப்பு இடப்பரப்பின் எல்லை அடையாளங்களும் எல்லைகளும் பின்வருமாறு:-

வடக்கு - வண்டிப்பாதை வழியாக உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமையில் (ஜிபிஎஸ்) குறிப்பிடப்பட்ட ஆயத்தொலை 584640 கி. 839784 வ என்ற இடத்திலிருந்து உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமையில் (ஜிபிஎஸ்) குறிப்பிடப்பட்ட ஆயத்தொலை 584809 கி. 839849 வ என்ற இடம் வரை.

கிழக்கு - கடைசியாக குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்து, உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமை (ஜிபிஎஸ்) ஆயத்தொலைகள் 584865 கி. 839786 வ, 584896 கி. 839722 வ, 584930 கி. 839663 வ, 584960 கி. 839629 வ, 585034 கி. 839560 வ, 585120 கி. 839373 வ, 585169 கி. 839301 வ மற்றும் 585260 கி. 839220 வ வழியாக உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமையில் (ஜிபிஎஸ்) குறிப்பிடப்பட்ட ஆயத்தொலைகள் 585436 கி. 838951 வ என்ற இடம் வரை.

தெற்கு - கடைசியாக குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்து துறையடிவீதி வழியாக உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமையில் (ஜிபிஎஸ்) ஆயத்தொலை 585125 கி, 838855 வ என்ற இடம் வரை.

மேற்கு - வண்டிப் பாதை.

**பாகம் II**


**பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பின் எல்லை அடையாளங்களினதும் எல்லைகளினதும் வரையறைக் கூறுகளின் உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமை**

**(ஜிபிஎஸ்) ஆயத்தொலைகள்**

| இலக்கம் | கிழக்கு ஆயத்தொலைகள் | வடக்கு ஆயத்தொலைகள் |
|---|---|---|
| 1. | 585436 | 838951 |
| 2. | 585260 | 839220 |
| 3. | 585169 | 839301 |
| 4. | 585120 | 839373 |
| 5. | 585034 | 839560 |
| 6. | 584960 | 839629 |
| 7. | 584930 | 839663 |
| 8. | 584896 | 839722 |
| 9. | 584865 | 839786 |
| 10. | 584809 | 839849 |
| 11. | 584640 | 839784 |
| 12. | 584740 | 839577 |
| 13. | 584844 | 839295 |
| 14. | 584947 | 839057 |
| 15. | 585125 | 838855 |

**பாகம்** III

**பாதுகாப்பு இடப்பரப்பின் நிலப்படம்**



**அட்டவணை II**

**பாகம் I**

**பாதுகாப்பு இடப்பரப்பினுள் அனுமதிக்கப்பட்ட செயற்பாடுகள்**

பாதுகாப்பு இடப்பரப்பினுள் பௌதிக திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பின்வரும் செயற்பாடுகளுக்காக மட்டும் இருத்தல் வேண்டும்:-

1. ஏலவேயுள்ள நீர்ப்பாசனத் திட்டத்தின் முகாமை மற்றும் பராமரிப்பு.
2. வேற்று ஆக்கிரமிப்பு தன்மைகொண்ட தாவர, விலங்கின இனங்களின் முகாமை.
3. மீன்பிடிச் செயற்பாடுகள்.
4. நீர்வாழ் தாவரங்களிலிருந்து பூக்களைப் பறித்தல்.
5. கல்வி மற்றும் ஆராய்ச்சிச் செயற்பாடுகள்.
6. சூழல் சுற்றுலாச் செற்பாடுகள் (நிரந்தர அல்லது பகுதியளவில் நிரந்தர கட்டமைப்புக்கள் இன்றி).

**பாகம் II**

**பாதுகாப்பு இடப்பரப்பினுள் இவ்வட்டவணையின் பாகம் I இல் தரப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் ஏற்புடையதாக்கப்படவேண்டிய நிபந்தனைகள்**

1. இவ்வட்டவணையின் பாகம் I இல் தரப்பட்ட ஏதேனும் பௌதிக திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பின்வரும் நிபந்தனைகளுக்கமைய நிறைவேற்றப்படுதல் வேண்டும்:-

(அ) பாதுகாப்பு இடப்பரப்பினுள் மீன்பிடிச்செயற்பாடுகளில் மோட்டார் படகுகள் பயன்படுத்தப்படுதலாகாது;

(ஆ) அத்தகைய செயற்பாடுகள், கிராமத்தவர்களின் பொதுவாழ்க்கை, வாழ்க்கை முறை மற்றும் வாழ்வாதாரத்துக்கும் தாவரங்களினதும் விலங்கினங்களினதும் வாழிடங்களுக்கும் இடையூறு ஏற்படாத அத்தகைய முறையொன்றில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்;

(இ) வேற்று ஆக்கிரமிப்பு தன்மைகொண்ட தாவர, விலங்கின இனங்கள் பாதுகாப்பு இடப்பரப்பினுள் அறிமுகப்படுத்தப்படுதல் ஆகாது;

(ஈ) எத்தகையதுமான நிலைமையிலான ஏதேனும் கழிவு அல்லது கழிவு நீர் பாதுகாப்பு இடப்பரப்பினுள் அப்புறுப்படுத்தப்படுதல் ஆகாது;

(உ) காணி மீட்பு, காணி தரங்குறைத்தல் மற்றும் மண்ணரிப்புக்கு இயைபான செயற்பாடுகள் பாதுகாப்பு இடப்பரப்பினுள் மேற்கொள்ளப்படுதலாகாது.

2. அதிகாரசபையானது, சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (ஒ) என்னும் பந்திக்கு அமைய, பாதுகாப்பு இடப்பரப்பினுள் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான அதன் பணிகளைப் புரிவதில் அதிகாரசபைக்கு உதவுவதற்கு குழுவொன்றை நியமிக்கலாம்.

3. அத்தகைய குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) அதிகாரசபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் மற்றும் கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதி ஆணையாளர்; அவர்கள் குழுவுக்கு கூட்டுத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(ஆ) மண்முனை தெற்கு எருவில்பற்று பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர்;

(இ) மண்முனை தெற்கு, எருவில்பற்று பிரதேச சபையின் செயலாளர்;

(ஈ) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ள ஒரு அலுவலர்;

(உ) இயைபான கமக்காரர்கள் ஒழுங்கமைப்பின் தவிசாளர் அல்லது அத்தகைய கமக்காரர்கள் ஒழுங்கமைப்பின் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதியொருவர்; அத்துடன்

(ஊ) அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு அவசியமாகக்கூடியவாறாக ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள அத்தகைய வேறு அலுவலர்கள்.

EOG 02-0038